**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.98/2025** |
| Deposition of witness | : | P.W.3 |
| Name | : | பாமா |
| Father's /Husband Name | : | சித்திரவேல் |
| Village | : | கீழமூலை |
| Taluk | : | குத்தாலம் |
| Age | : | 42 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day of October 2025.
A1 , A2, A4, A5 present. A3 absent. Petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குத்தாலத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எனது கணவர் பெயர் சித்திரவேல் அதற்கு ஆதாரமாக ஆதார் அட்டையை தாக்கல் செய்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரி கலையரசன் என்பவரை எனக்கு தெரியாது. எனது பெற்றோர் வீடு காங்கேய நகரத்தில் உள்ளது. கடந்த 20.05.2024 ம் தேதி எனது பெற்றோர் ஊரில் உள்ள கோவில் திருவிழாவிற்காக நான் காங்கேய நகரத்திற்கு வந்திருந்தேன். 20.05.2024 ம் தேதி மாலை 07.30 மணியளவில் நானும் எனது அப்பா கிருஷ்ணமூர்த்தி, எனது மூத்த சகோதரர் செந்தில்குமார் மற்றும் இளைய சகோதரர் கோபி சங்கர் ஆகியோருடன் எங்கள் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தோம் . அப்போது அதே தெருவில் வசிக்கக்கூடிய லோகநாதன் மகன்கள் மகேஸ்வரன், விக்னேஷ்வரன் மற்றும் அவர்களுடன் வந்த மூன்று நபர்கள் கலையரசன், முத்துராமன் மற்றும் பக்கத்து தெருவை சேர்ந்த விக்னேஷ் அங்கு வந்து எனது சகோதரர் கோபிசங்கரை பார்த்து தேவிடியா மகனே என் தங்கச்சிக்கு மாப்பிள்ளை பாக்குறியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள், அப்போது பக்கத்தில்

கிடந்த ரீப்பர் சட்டத்தை எதிரிகள் மகேஷ்வரன் மற்றும் விக்னேஷ்வரன் எடுத்து எனது சகோதரர் கோபிசங்கரின் தலையிலும் முதுகிலும் அடித்தார்கள். அவ்வாறு அவர்கள் அடித்ததில் அவர் நிலைகுழைந்து கீழே விழுந்தார். அபபோது எதிரி முத்துராமன் செங்கல்லால் எனது சகோதரர் கோபிசங்கரின் இடது பக்க காதில் அடித்தார். விலக்க வந்த எனது சகோதரர் செந்தில் குமாரை அதே ரீப்பர் சட்டத்தால் அவரது தலையில் அடித்தார்கள். அதில் அவருக்கு 2 inch அளவில் காயம் ஏற்பட்டது. அதில் இரத்த காயம் ஏற்பட்டது. தடுக்க வந்த எனது அப்பா கிருஷ்ணமூர்த்தி மற்றும் என்னையும் எதிரிகள் கீழே தள்ளிவிட்டு எங்களை மிதித்தார்கள். கோபிசங்கருக்கு மண்டையில் காயம் ஏற்பட்டது. அவரது இடதுபக்க காது பகுதியில் செங்கல்லால் தாக்கியதில் பல்லில் காயம் ஏற்பட்டது. ஊர்மக்கள் வரவே ரீப்பர் கட்டையை போட்டுவிட்டு இந்த வேலையை இனிமேல் வைத்துக்கொண்டால் உங்களை குடும்பத்தோடு இதே இடத்தில் புதைத்துவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். மறுநாள் 21.05.2024 ம் தேதி காலை 08.30 மணிக்கு விக்னேஷ்வரன், கலையரசன், மகேஷ்வரன் என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் திட்டிக்கொண்டிருக்கும் போதே கோபிசங்கரையும் செந்தில்குமாரையும் அடித்தார்கள். எனது மூத்த சகோதரர் செந்தில்குமார் மயக்கம் வந்து கீழே விழுந்தார். கோபிசங்கர் கீழே விழுந்துவிட்டார். செந்தில் குமார் மற்றும் கோபிசங்கரையும் எனது மாமா மகன் நாகேந்திரன் அவரது சொந்த கார் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்கண்ட விபரங்களை நான் போலீசாரிடம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 21.05.2024 ம் தேதியில் காலை 08.30 மணிக்கு விக்னேஷ்வரன், கலையரசன், மகேஷ்வரன் ஆகியோர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவில்லை என்றால் சரியல்ல. கடந்த 21.05.2024 ம் தேதியில் காலை 08.30 மணிக்கு கோபிசங்கரை தாக்கியதில் அவர் கீழே

விழுந்துவிட்டார் என்ற விபரத்தினை போலீசார் விசாரணையில் சொல்லிவில்லை என்றால் சரியல்ல. கடந்த 21.05.2024 ம் தேதியில் காலை 08.30 மணிக்கு விக்னேஷ்வரன், கலையரசன், மகேஷ்வரன் ஆகியோர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து அடித்து கீழே தள்ளியதில் கோபிசங்கருக்கும் செந்தில்குமாருக்கும் காயம் ஏற்பட்டு திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நாளில் செந்தில்குமார் எதிரிகள் தாக்கியதில் மயங்கி விழுந்த விபரத்தினை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடந்த 20.05.2024 ல் எதிரிகள் ரீப்பர கட்டையால் தாக்கியதில் எனது சகோதரர் செந்தில்குமாருக்கு 2inch காயம் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொன்ன விபரங்களை போலீசார் எழுதிகொண்டார்கள். கடந்த 20.05.2024 அன்று தடுக்க வந்த என்னையும் எனது சகோதரர்களையும் எனது தந்தையையும் கீழே தள்ளிவிட்டு மிதித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் எதிரிகள் அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கடந்த 20.05.2024 ம் தேதியில் ஊர்க்காரர்கள் விலக்கிவிட்டதாக சொன்னவர்களின் பெயர்களை என்னிடம கேட்டு போலீசார் எழுதிக்கொண்டார்களா என்றால் இல்லை. ஊர்காரர்கள் யார் விலக்கி விட்டார்கள் என்று நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எனது மாமா நாகேந்திரன் எனது சகோதரர்கள் செந்தில்குமாரையும் கோபிசங்கரையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்ற விபரத்தினை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது சகோதரர் செந்தில்குமாருக்கு 20.05.2024 அன்று தலையில் ஏற்பட்ட காயத்திற்கு வலங்கைமான் அரசு மருத்துவமனையில் தையல் போட்டார்களா என்றால் போட்டார்கள். நான் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. நாகேந்திரனிடம் கேட்டால் விபரம் தெரியும் என்றால் சரிதான். கடந்த 20.05.2024 அன்று கோபிசங்கர் எந்த மருத்துவனைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவமனைக்கு நாகேந்திரன் தான் அழைத்து சென்றார். எனது அலைபேசி எண் என்னவென்றால்

8883936108. விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள 8973897833 என்ற எண்ணை நான் பயன்படுத்தவில்லை என்றால் சரிதான். நான் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். எனது சகோதரர் சிகிச்சையில் சேர்த்த போது மருத்துவர் அவரை விசாரித்த போது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. நாகேந்திரன் அவருடன் இருந்தார். மருத்துவருக்கு எனது பெயரை நான் சொல்லாமல் தெரியாது என்றால் சரிதான். நான் தான் எனது சகோதரரை மருத்துவமனையில் சேர்த்தேன் என்றாலும் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது சகோதரர் மருத்துவரிடம் சொன்ன விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா1ன் நண்பர் கோவையை சேர்ந்த மணிகண்டன் ஆவார். எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார் என்றால் 2 முறை வந்துள்ளார். நான் பெரும்பாலும் எனது கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது மகன் காங்கேய நகரம் வந்து விபரத்தினை போலீசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கோவில் திருவிழாவிற்கு அன்றைய தினம் ஓலையாமங்கலம் ஆற்றுக்கரையில் இருந்து எங்கள் ஊர் மன்மத சுவாமி கோவிலுக்கு காவடி எடுத்து ஊர்மக்கள் அனைவரும் செல்வது வழக்கம். நானும் சென்றிருந்தேன் என்றால் சரிதான். 20.05.2024 அன்று மாலை 07.30 மணிக்கு காவடி வந்தது என்றால் சரிதான். அன்றைய தினம் மணிகண்டன் எனது சகோதரர் அ.சா.1ம் எதிரிகள் 1,2 சகோதரி கார்த்திகாவை தகராறு செய்தார்கள் என்றாலும் அதை ஊர்மக்கள் தடுத்து அனுப்பிவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. இது சம்மந்தமாக மறுநாள் ஊரில் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகளின் தந்தையார் மணிகண்டன் மற்றும் அ.சா.1ன்மீதும் குடவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. 21.05.2024 அன்று காவல் நிலையத்தில் பெண் சார்ந்த விஷயம் என்பதால் புகாரை வாபஸ் வாங்குமாறும் சொல்லி எங்களை கண்டித்தும் பஞ்சாயத்து நடைபெற்றது என்றும் அதன் அடிப்படையில் 1, 2 எதிரிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட புகார் திரும்ப பெறப்பட்டது என்றும், பஞ்சாயத்திற்கு கட்டுப்படவில்லை என்றால் எனது சகோதரர் செந்தில் குமாரின் பூசாரி வேலையை

நிறுத்தி விடுவதாக பஞ்சாயத்து செய்தார்கள் என்றால் சரிதான். ஊர் பஞ்சாயத்தார்கள் பதவியை பறித்து விடுவார்கள் என்ற காரணமாகவும் பெண்ணிற்கு எதிரான அநீதி ஏற்படுத்தியதால் பஞ்சாயத்தார்கள் கண்டித்தார்கள் என்பதால் எந்த வித காயமுமின்றி மருத்துவமனையில் சேர்ந்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.14 10:18:32 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`